பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 05 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – பாகிஸ்தான் இடையே கடந்த 3 நாட்களாக நடைபெற்ற போர் நிறுத்தி வைக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. போர் தொடர்பான தவறான தகவல்களை பாகிஸ்தான் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இந்திய ராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

3. எதிர்காலத்தில் எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கையும் போராகவே கருதப்பட்டு தக்க பதிலடி கொடுப்பது என இந்தியா முடிவு செய்துள்ளது.

4. ஆஃப்கனிஸ்தான் எல்லைப் பகுதியில் இந்தியா ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் கூறிய குற்றச்சாட்டை ஆஃப்கனிஸ்தான் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

5. உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா மேலும் ஒரு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

---இனி விரிவான செய்திகள்---

<<<<>>>>

இந்தியா – பாகிஸ்தான் இடையே இன்று மாலை 5 மணி முதல் போர்நிறுத்தம் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

இன்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்று மாலை பாகிஸ்தானின் ராணுவ தலைமை இயக்குநர் இந்தியாவின் ராணுவ தலைமை இயக்குநரை தொடர்பு கொண்டு போர்நிறுத்தம் குறித்து பேசியதாக தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இன்று மாலை 5 மணி முதல் வான்வழி, தரைவழி மற்றும் கடல் மார்க்கமான அனைத்து ராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ராணுவ நடவடிக்கைகள் குறித்த பேச்சுவார்த்தை மீண்டும் நாளை மறுநாள் பகல் 12 மணிக்கு நடைபெற உள்ளதாகவும் திரு. விக்ரம் மிஸ்ரி கூறினார்.

இதனிடையே வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இந்தப் போர்நிறுத்தம் தொர்பாக வெளியிட்டுள்ள தகவலில், அனைத்து ராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தி வைப்பதில் இருதரப்பிலும் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாகத் தெரிவித்த அவர், பயங்கரவாத நடவடிக்கைகள் எந்த வடிவில் வந்தாலும் அதனை ஒடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் இந்தியா – பாகிஸ்தான் இடையே ஏற்பட்டுள்ள இந்த முடிவு வரவேற்கத்தக்கது என்று கூறினார்.

இம்முடிவை எடுத்துள்ள இரு நாடுகளுக்கும் தமது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் பாதுகாப்பையும், இறையாண்மையையும் உறுதி செய்வதில் முப்படைகளும் எப்போதும் தயாராக இருப்பதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று மாலை முப்படை அதிகாரிகள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பேசிய ராணுவ அதிகாரி கர்னல் சோஃபியா குரேஷி, கடற்படை அதிகாரி கமாண்டர் ரகு நாயக் ஆகியோர் பாகிஸ்தான் தரப்பில் தொடர்ந்து உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்பப்படுவதாக தெரிவித்தனர்.

மசூதிகள் மீது இந்திய ராணுவம் தாக்குதல் நடத்தியதாக தவறான தகவல்களை பாகிஸ்தான் தரப்பில் பரப்பப்படுவதாக அவர்கள் கூறினர்.

**S400** மற்றும் பிரம்மோஸ் ஏவுதள அமைப்பு ஆகியவற்றை பாகிஸ்தான் ராணுவம் தாக்கி அழித்ததாக வெளியான தகவல்கள் உண்மையில்லை என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்றும், எந்தவொரு வழிபாட்டுத் தலத்தையும் குறிவைத்து தாக்குதல் நடத்த எப்போதுமே முற்பட்டதில்லை என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் எந்தவொரு தவறான நடவடிக்கையையும் எதிர்கொள்ள முப்படைகளும் தயாராக இருப்பதாகவும் அவர்கள் உறுதிபடத் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் நடத்திய தாக்குதலை இந்தியா வலிமையுடன் கையாண்டது என்றும், இனிமேலும் இதுபோன்ற அத்துமீறல்களை பாகிஸ்தான் நடத்தினால் தக்க பதிலடி தரப்படும் என்றும் இந்திய ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 3 நாட்களில் பாகிஸ்தான் ராணுவம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டு விட்டதாகவும், அந்நாட்டு ராணுவ கட்டமைப்புகள் அழிக்கப்பட்டு பெரும் இழப்பை சந்தித்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானுக்கு பதிலடி தருவதில் முப்படையினரும் மிகுந்த பொறுப்புடன் செயல்பட்டதாகவும் ராணுவ அதிகாரிகள் கூறினர்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் மற்றும் முப்படைகளின் தளபதிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பதில் தாக்குதல் நடவடிக்கை குறித்தும் கேட்டறிந்தார்.

மக்களின் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறிய பிரதமர், உயிரிழப்பு ஏற்படாமல் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

பயங்கரவாதத்தை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்ற மத்திய அரசின் நிலைப்பாடு குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சரும், அதிகாரிகளும் இக்கூட்டத்தில் வலியுறுத்தினர்.

எதிர்காலத்தில் எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கையும் பாகிஸ்தான் மண்ணில் இருந்து ஏவப்பட்டாலும் அதனை ஒரு போர் நடவடிக்கையாகவே கருதி பதிலடி கொடுக்க வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தான் எல்லைப் பகுதியில் இந்தியா ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் கூறிய குற்றச்சாட்டை ஆஃப்கனிஸ்தான் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இதுகுறித்து ஆஃப்கன் செய்தித் தொலைக்காட்சியில் பேசிய அந்நாட்டின் பாதுகாப்புத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. இனாயத்துல்லா கவாரிஸ்மி, பாகிஸ்தானின் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை என்று உறுதிபடத் தெரிவித்தார்.

இன்று காலை புதுதில்லியில் செய்தியாளர் சந்திப்பில் பேசிய இந்திய வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரியும் பாகிஸ்தான் கூறிய குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

ஆஃப்கனிஸ்தானில் உள்ள மக்கள், தற்போது யார் நண்பர்கள், யார் எதிரிகள் என்பதை தெளிவாக இனம்புரிந்துகொண்டுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

ஆஃப்கனிஸ்தான் எல்லையைக் கடந்து தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பதை அந்நாட்டு மக்களுக்கு தெளிவாக தெரியும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் ஆஃப்கனிஸ்தான் மீது இந்தியா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

பாகிஸ்தானுக்கு எதிரான இந்திய ராணுவத்தின் நடவடிக்கைகள் குறித்தும், தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை குறித்தும் சந்தேகத்திற்கிடமான தகவல்கள் ஏதேனும் சமூக வலைதளத்தில் இடம்பெறுமாயின் அதுகுறித்து தகவல் தெரிவிக்குமாறு மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தத் தகவல்களை 8 7 9 9 7 1 1 2 5 9 என்ற வாட்சப் எண்ணில் தெரிவிக்கலாம்.

**factcheck@pib.gov.in** என்ற இணையதள முகவரியிலும் இதுகுறித்து பொதுமக்கள் தகவல் தெரிவிக்கலாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

சிவில் பாதுகாப்பு சைரன் ஒலியை ஊடகங்கள் தங்களது நிகழ்ச்சிகளில் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்த சைரன் ஒலியை நிகழ்ச்சிகளில் பயன்படுத்துவதால் அதன் முக்கியத்துவம் மக்களுக்கு தெரியாமல் போக வாய்ப்புள்ளதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

அசாதாரண போர்ச் சூழலில் மட்டும் இந்த ஒலி எழுப்பப்பட்டால் மக்கள் விழிப்புடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா மேலும் ஒரு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

ஷாங்காயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு இறுதி ஆட்டத்தில் **Madhura Dhamangaonkar** 139, 138 என்ற புள்ளிக் கணக்கில் அமெரிக்காவின் **Carson Krahe**-ஐ வென்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

ஆடவர் பிரிவில் ரிஷப் யாதவ் தென்கொரியாவின் **Kim Jungho**-ஐ வென்று வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

-------------

ஈரானில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங், இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 6-4 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Prajwal Dev**-ஐ வென்றார்.

<<<<>>>>